பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 24 சனிக்கிழமை 08.05.2022 கதிர் 77

யாழில் இலஞ்சம் பெற்ற

## 3 பொலிஸார் இடமாற்றம்

யாழ்ப்பாணத்தில் 10 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊர்காவற்துறை, நெடுந்தீவு பொலிஸ் ☞2

## காலிமுகத்திடலில் காளிக்குப் பூஜை



கொழும்பு காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராகப் பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ☞2

## நாளை முதல் நாடு முடங்கும் அபாயம்



நாளை திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது. தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, ☞2

## புதிய பிரதமராக கரு ஜயசூரிய?



வெளியாகியது பரபரப்புச் செய்தி

**சர்வகட்சி இடைக்கால அரசின் பிரதமர் பதவிக்கு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனப் பரபரப்புச் செய்திகள் வெளியாகியுள்ளன.** ☞2



## அநுராதபுரம் சென்ற பிரதமருக்கு எதிர்ப்பு

அநுராதபுரம் ஸ்ரீ மஹா போதி உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்குச் இன்று சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாருக்கு சிறு குழுவினரால் அங்கு ☞2

## பிரதமர் பதவியை ஏற்கவேமாட்டேன்!

கோட்டாவின் கோரிக்கையை அடியோடு நிராகரித்தார் சஜித்



பிரதமர்பதவியை ஏற்று இடைக்கால அரசை அமைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை எதிர்க்கட்சித்தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நிராகரித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகங்கள் ☞2

## கோட்டா பதவியிலிருந்து விலகினால் ஜனாதிபதி பதவியை ஏற்க நான் தயார்

சஜித் அதிரடி அறிவிப்பு

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினால், ஜனாதிபதி பதவியை ஏற்பதற்கு நான் தயார்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது, ஜனாதிபதி பதவி விலகினால், நாடாளுமன்றத்தில் பெரும்பாலானவர்கள் விரும்பினால் ஜனாதிபதியாகச் செயற்படத் தான் தயார் ☞2

## அவசரகால சட்டத்தை உடன் வாபஸ் பெறுக!

கோட்டாவிடம் சுரேஷ் வலியுறுத்து



அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி, அரசு மீண்டும் தவறிழைத்துள்ளது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் ☞2

## ஜெலி பிஷ் தாக்குதலில் காரைதீவில் மீனவர் பலி





பாறுக் ஷிஹான்

மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் பாரிய சொறிமுட்டையில்(ஜெலி பிஷ்) அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சொறிமுட்டைக்கடிக்கு உள்ளான மீனவர் சக மீனவர்களால் மீட்கப்பட்டு காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்த மீனவர் மாயவலை மூலம் மீன் பிடிப்பதற்கு சக மீனவர்களுடன் இணைந்து ஈடுபட்ட பின்னர் கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் படகில் இருந்து கடலில் இறங்கி வலையை சரி செய்ய முயற்சித்துள்ளார்.

இவ்வாறு வலையைச் சரி செய்யக் கடலுக்குள் இறங்கிய மீனவரை பாரிய சொறிமுட்டை தாக்கியுள்ளது. அவரது நெஞ்சுப் பகுதியில் ☞2

## திருமலையில் பாம்பு தீண்டி வயோதிபர் ஒருவர் மரணம்!

திருகோணமலை - திம்பிரிவெவ பகுதியில் வயல் காவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் பாம்புதீண்டி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர் மாத்தளைப் ☞2

## ஜெலி பிஷ் .............

தாக்குதலுக்குள்ளான அடையாளங்களும் காணப்படுகின்றன என சம்பவ இடத்திற்கு வருகை தந்த காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

உடனடியாக கடலில் இருந்து சக மீனவர்களால் மீட்கப்பட்ட அந்த மீனவர் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 3 பிள்ளைகளின் தந்தையான - காரைதீவு 8 ஆம் பிரிவைச் சேர்ந்த - சுப்ரமணியம் ஜெயரஞ்சன் (வயது-51) என அடையாளம் காணப்படட்டுள்ளார்.

சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## அநுராதபுரம் சென்ற.....

எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் பிரமரும் அவரது பாரியாரும் மிரிசவெட்டியவுக்குச் சென்றபோது அங்கும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதையடுத்து பாதுகாப்புப் படையினர் பிரதமரை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றினர்.

## புதிய பிரதமராக.....

இதற்குப் பல கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று அந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 13 யோசனைகளுக்கமைய, இடைக்கால அரசமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும் நேற்று இணக்கம் வெளியிட்டது. எனவே, இடைக்கால அரசமைக்க ஜனாதிபதி முடிவெடுத்தால் பிரதமராக கரு ஜயசூரிய நியமிக்கப்படுவார் என்று அந்தச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரு ஜயசூரிய நாடாளுமன்றம் வருவதற்காக, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியில் எம்.பி. ஒருவர், தனது பதவியை இராஜிநாமா செய்யவுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

## நாளை முதல் ......

எதிர்வரும் 17ஆம் திகதி பொது மக்களுடன் நாடாளுமன்றத்தை முற்றுகையிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்துத் தொழிற்சங்க உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களால் நாடாளுமன்றத்தை முற்றுகையிடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய நெருக்கடிக்கு நாடாளுமன்றம் தீர்வு காணும் வரை தாங்கள் போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலையில் ......

பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய சுனில் எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவமானது நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் தொழில் நிமித்தம் காரணமாக மாத்தளையில் இருந்து வருகைதந்து கடந்த ஆறு வருடங்களாக மஹதிவுல்வெவ பிரதேசத்தில் உள்ள வயல் காவல் கடமையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

வயலுக்குள் நுழைந்த யானையை விரட்டுவதற்காகச் சென்றபோது அவரைப் பாம்பு தீண்டிய நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மொரவெவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## காலிமுகத் திடலில் .......

நேற்றிரவு காளிக்குப் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு தப்பு அடித்து, கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

## 3 பொலிஸார்.....

பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். கல்வியங்காட்டுப் பகுதியில் டிப்பர் ஒன்றினை மறித்து 10 ஆயிரம் ரூபா பணம் பெற்றமை தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகேவிடம் நேரடியாக முறைப்பாடு செய்துள்ளார். பாதிக்கப்பட்ட நபரையும் இலஞ்சம்பெற்றமூன்றுபொலிஸாரையும் விசாரணைக்கு அழைத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பெற்றுக்கொண்ட 10 ஆயிரம் பணத்தைத் திருப்பி வழங்குமாறு உத்தரவிட்டுள்ளதுடன் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடனடி இடமாற்றம் வழங்கியுள்ளார். யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக பல்வேறு பொலிஸ் பிரதேசங்களில் இலஞ்சம் பெறும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூடிய கவனம் செலுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவசரகால சட்டத்தை .......

சுரேஷ் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவசரகால நிலையால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவார்களானால் அதற்கான விளைவுகளை அரசு சந்திக்க வேண்டியேற்படும்.

எனவே, தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகால நிலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக வாபஸ் பெற வேண்டும் -என்றார்.

## பிரதமர் பதவியை .......

இந்தச் செய்தியை இன்று வெளியிட்டுள்ளன.

இடைக்கால அரசுக்கு நிபந்தனை களை முன்வைத்துள்ள சஜித், பிரதமர் பதவியை ஏற்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளார் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோட்டா பதவியி .......

என்று சஜித் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கவும் அவர் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

## தமிழரசு உறுப்பினரை நீக்கிய வழக்கு இடைக்கால தடை உத்தரவு நீடிப்பு!

**இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் வாலிபர் முன்னணியின் இணை பொருளாளருமாகிய அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளம் செழியனை கட்சியில் இருந்து நீக்கியமை தொடர்பான வழக்கு மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டநீதிமன்றில் விசார ணைக்கு எடுத்து கொள்ளப் பட்டபோது அந்த நீக்கத்துக்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவு தொடர்ந்தும் வரும் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.**

**இலங்கை தமிழரசுக்கட்சி வாலிபர் அணி பொருளாளரும் , மத்தியகுழு உறுப்பினருமான பீற்றர் இளம்செழியன் தம்மை கட்சியில் இருந்து, இலங்கை தமிழரசு கட்சி பதில் பொது செயலாளர் வைத்தியர் ப. சத்தியலிங்கம் நீக்கியமை தவறு என யாழ். மாவட்ட நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.**

**அவரின் மனுவிற்கு ஆதரவாக சட்டத்தரணி கலாநிதி குருபரன் முன்னிலையாகியிருந்தார்.**

**சம்பந்தப்பட்ட இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொது செயலாளர் ப. சத்தியலிங்கம் ஆகியோர் நீதிமன்றில் பிரசன்னமாகவில்லை.**

**நிர்வாக செயலாளர் சூ. சேவியர் குலநாயகம் மட்டும் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தார்.**

**பூரண விளக்கம் வழங்கும் பொருட்டு கடந்த வெள்ளிக் கிழமையில் இருந்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டு மீண்டும் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.**

**வழக்கில் பிரதிவாதிகளாக இலங்கை தமிழரசு கட்சி பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, நிர்வாக செயலாளர் குலநாயகம் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட் டிருந்தன.**





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மஹிந்தரின் பதவி விலகல்!

ராஜபக்ஷக்கள் மீளெழுச்சியின் குறியீட்டு ரீதியான சாவு மணி பெரும்பாலும் நாளை ஒலிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ அனேகமாக நாளை விலகும் நிகழ்வுதான் அது.

ராஜபக்ஷவின் அரசியல் சகாப்தத்தின் பிதாமகர் மஹிந்த ராஜபக்ஷதான். அந்தக் குடும்பத்தின் அரசியல் ராஜ்ஜியம் – செல்வாக்கு – அவரைச் சுற்றித்தான் கட்டியெழுப்பப்பட்டது.

2015இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் இருந்து அவர் தோற்கடிக்கப்பட்டு, துரத்தி அடிக்கப்பட்ட போது – அலரி மாளிகையில் இருந்து அவர் வெளியேறிய போது – நாடு முழுவதிலும் பல லட்சம் பேர் கண்ணீர் மல்க அவருக்கு விடை கொடுத்தனர். பல்லாயிரம் பேர் ஒன்று திரண்டு மெதமுலன வரை அவரது வீட்டுக்கு அவருடன் கூடச் சென்று வழி அனுப்பினர்.

மீண்டும் ஒரு குறுகிய காலத்தில் – இரண்டு, மூன்று வருடங்களில் – ராஜபக்ஷக்கள் மீளெழுச்சி பெற்றனர். அதுவும் கூட மஹிந்த ராஜபக்ஷவை மையப்படுத்தியே நடந்தது,

இப்போது அழாக்குறையான நிலையில், பிரதமர் பதவியிலிருந்து தமது தரப்பினராலேயே அவர் அகற்றப்படும் அவலம் வந்திருக்கின்றது. அவர் தன்னுடன் கூட்டி வந்து, தாம் ஜனாதிபதியாக்கிய சகோதரர் அவரை அலரி மாளிகையில் இருந்து – பிரதமர் பதவியில் இருந்து – வெளியேறும் வழியைக் காட்டி நிற்கும் துரதிர்ஷ்ட நிலைமை.

அலரி மாளிகையில் இருந்து 2015ல் மஹிந்தர் வெளியேறியமைக்கும் இப்போது அவர் வெளியே போகின்றமைக்கும் அதிக வித்தியாசங்கள் உண்டு.

அப்போது, மீளவும் அலரி மாளிகைக்கு திரும்பி வரும் வாய்ப்பு உண்டு, தனது ஆளுமையால் அதனை பெறலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ஆனால், இப்போது நிலைமை அதுவல்ல. அவர் மட்டுமல்ல, அவரின் அரசியல் வாரிசு – அடுத்த தலைமுறை – நாமல் ராஜபக்ஷ கூட அரசியலில் மீளெழமுடியாத பின்னடைவுச் சூழலை அவர் அதிகாரத்துக்கு கொண்டு வந்த அவரது தம்பி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பாதித்து தந்திருக்கிறார் என்ற வேதனையோடுதான் பதவியை விட்டு அவர் வெளியேறும் துரதிர்ஷ்டம் நேர்ந்திருக்கிறது.

ராஜபக்ஷக்களின் குடும்பத்தவர்கள் என்றாலே நாட்டின் அரசியலில் இடமே இல்லை என்ற மோசமான அவல நிலையை ஜனாதிபதி கோட்டாபயவின் சீர்கெட்ட அரசியலும், வக்கற்ற நிர்வாகமும் சம்பாதித்து கொடுத்திருக்கின்றன.

எதிரணியில் போய் அமர வேண்டிய மஹிந்த ராஜபக்ஷ அதற்கான ஆசு வேண்டியோ என்னவோ இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியில் அநுராதபுரத்தில் உள்ள புனித வெள்ளரசு மரத்தை வழிபட இன்று அங்கு சென்றிருந்தார். அங்கும் வீதியோரத்தில் ஒருபுறம் மக்கள் அழுது விடையளிக்க, மறுபுறம் பெரும்பான்மையானோர் திரண்டு நின்று அவர் வந்தபோது கூக்குரலிட்டு பதாகைகள் அசைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தனது தம்பியார் கோட்டாபய ராஜபக்ஷ தங்களின் ராஜபக்ஷ குடும்பத்திற்குத் தேடிச் சம்பாதித்து வைத்த பெருமையின் தாற்பரியத்தை அப்போது மஹிந்தர் முழுமையாக உணர்ந்திருப்பார் என்று நம்பலாம்.

மஹிந்தவின் பதவி விலகலின் பின்னர் புதிதாக பதவி ஏற்கக்கூடிய இடைக்கால பிரதமரின் தெரிவில் கூட பல குத்து வெட்டுக்கள் ஆளும் தரப்புக்குள் இருப்பதாகத் தெரிகிறது. அது குறித்துக் கூட பதவி விட்டுச் செல்லும் பிரதமரிடம் யாரும் ஆலோசனை – வழிகாட்டல் – கேட்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

நாளை, மஹிந்த பிரதமர் பதவியிலிருந்து விடுபடுவதற்கு முன்னரான ஏற்பாடுகள், நடவடிக்கைகள் குறித்து இன்று மாலை கட்சியின் மூத்த தலைவர்களுடன் அலரி மாளிகையில் அவர் ஆலோசனை கலக்க இருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிரணியில் புதிய அரசியல் சவால் களத்துக்குள் அவர் இறங்கப் போகின்றார். அந்தத் தளத்தின் அதிர்வுகளுக்கு ஈடு கொடுக்க அவர் வயது இடமளிக்குமோ என்னவோ...?

# அவசரகால நிலைப் பிரகடனத்தால் பொருளாதாரம் மிகவும் மோசமாகும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரிக்கை

அவசரகாலசட்டம்போன்றநடவடிக்கைகள் தற்போதைய பொருளாதாரத்தை மிக மோசமான நிலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையையே ஏற்படுத்தும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் –

அரசாங்கம் அவசரகால சட்டத்தை கடந்த மூன்று மாதங்களில் இரண்டாவது தடவையாக அமுல்படுத்தி உள்ளது.

மக்கள் முழுமையாக அரசாங்கத்தை எதிர்க்கும் நிலைக்கு வந்திருக்கின்ற வேளையில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்து விடாமல் – அனைத்து மாவட்டங்களிலும் பரவவிடாமல் – நெருக்கடியை ஏற்படுத்தத் தற்போதுள்ள நிலையில் அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளது.

தேர்தலொன்று நடைபெற்றால் கிட்டத்தட்ட 30 ஆசனங்களை மட்டுமே பெறக்கூடிய நிலையிலேயே மிக மோசமாக அரசாங்கம் பலமிழந்து போய்விட்டது.

கடந்த இரண்டுவாரங்களுக்கு முன்னதாக நிதி அமைச்சு சார்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த பேச்சுகளில் சர்வதேச நாணய நிதியம் உதவி செய்வதாக இருந்தால் அதற்கு அரசு ஸ்திரத்தன்மையுடன் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அரசை ஆளும் அரசாங்கம் ஸ்திரத்தன்மை உடையதாக இருக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் பொருளாதாரத்தை மிக மோசமான நிலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையை ஏற்படுத்தும். – என்றும் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால அரசமைக்க இடமளியுங்கள்; இல்லையேல் தேர்தலுக்குச் செல்லுங்கள்!

## சந்திரிகா பண்டாரநாயக்க எடுத்துரைப்பு



இடைக்கால அரசாங்கத்துக்கு இடமளித்து அரசாங்க பதவி விலக வேண்டும். அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைக்கால அரசாங்கத்துக்குத் தயாராக இல்லை என்றால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 'மக்கள் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் வழங்குகிறார்கள். மக்கள் கொடுக்கும் அதிகாரம் வாழ்நாள் முழுவதும் அல்ல. தற்காலிகமானது என்பதை அவர்கள் உணர வேண்டும்.' – என்றும் தெரிவித் துள்ளார்.

பௌத்த பிக்குகள் உள்ளிட்ட மதத் தலைவர்கள், சிவில் சமூகம் மற்றும் பொது மக்கள் தங்களது வலுவான வேண்டுகோளுக்கு செவிசாய்க்காமல் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் தரம் சோதனை மீறினால் உரிமம் இரத்து!




நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருளின்தரம்தொடர்பில்சோதனைகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழிகாட்டுதல்களை மீறினால் உரிமம் இரத்து செய்யப்படும் என எரிபொருள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் தரம் மற்றும் பெற்றோலியப் பொருள்களை கலப்பது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு வெள்ளவத்தையில் பதற்றம்

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக வெள்ளவத்தை ஹம்ப்டன் லேனில் நேற்று (சனிக்கிழமை) பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

எரிவாயு பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த மக்கள், எரிவாயுவை வழங்கக் கோரி வீதியை மறித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நேற்று உக்ரைனின் கார்கிவ் நகரில் ரொக்கெட் குண்டு வீச்சுத் தாக்குதல்

## பல ஆயுதங்கள் அழிப்பு



உக்ரைனின் கார்கிவ் நகரில் ஆயுத கிடங்குகள் மீது குண்டுவீசிய ரஷ்ய ராணுவம், அங்கு வைக்கப்பட்டிருந்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தந்த ஆயுதங்களை அழித்துவிட்டதாக கூறி உள்ளது. ரஷ்யா, உக்ரைன் இடையேயான போர் 73வது நாளை எட்டி உள்ளது. கிழக்கு உக்ரைனை மொத்தமாக கைப்பற்றும் திட்டத்துடன் ரஷ்ய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று வரை கார்கிவ், ஒடேசா துறைமுக நகரம் ஆகிய இடங்களில் உள்ள உக்ரைன் ஆயுத கிடங்குகளை குறிவைத்து ரஷ்ய ராணுவம் ரொக்கெட் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தியது. இதில் ஒடேசா துறைமுக நகரத்தின் துஷ்ரோ பகுதியில் இருந்த 3 ஆயுத கிடங்குகள் உட்பட 18 உக்ரைன் ராணுவ தளங்களை இரவோடு இரவாக ரஷ்யா அழித்துள்ளது.

அதே போல, கார்கிவ் நகரின் பொகுடிகோவ் ரயில் நிலையம் அருகே இருந்த உக்ரைனின் ஆயுத கிடங்கையும் ரஷ்யா அழித்துள்ளது. இங்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் வழங்கிய நவீன ஆயுதங்களை உக்ரைன் ராணுவம் வைத்திருந்ததாகவும், அவை மொத்தமாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் ரஷ்யா கூறி உள்ளது. இதற்கிடையே, மரியுபோல் நகரின் அசோவ்ஸ்டால் இரும்பு ஆலையில் சிக்கியிருக்கும் மக்களை மீட்கும் பணிகள் நேற்றும் நடந்தன. நேற்று ஒரே நாளில் 11 குழந்தைகள் உட்பட 50 பேர் மீட்கப்பட்டனர் என ரஷ்ய ராணுவம் கூறி உள்ளது. இதே போல உக்ரைன் ராணுவமும் அங்கிருந்து மக்களை அப்புறப்படுத்தி மீட்டு வருகிறது. இது வரை சுமார் 500 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, உக்ரைனுக்கு மேலும் ரூ.1,125 கோடி மதிப்பிலான ராணுவ உதவிகளை வழங்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியுள்ள ராணுவம் மற்றும் பிற உதவிகளின் மொத்த மதிப்பு ரூ.28,500 கோடியாக அதிகரித்துள்ளது. அதேபோல், உக்ரைனுக்கு மேலும் ராணுவ உதவிகளை அனுப்ப நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்கும்படியும் அதிபர் ஜோ பைடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் தொடர் ராணுவ உதவியால் உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் முடிவுக்கு வராமலும், பேச்சின்றி தொடர்ந்து நீடித்து வருகிறது என்பது குறிப் பிடத்தக்கது.

### நாளை முக்கிய அறிவிப்பா?

இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியன் வெற்றி பெற்றதன் 77வது ஆண்டு விழாவை ரஷ்யா நாளை கோலாகலமாக கொண்டாட உள்ளது. அன்றைய தினம் பிரமாண்ட ராணுவ அணிவகுப்பு நடத்தப்படுவது வழக்கம். அதே போல இந்த ஆண்டுக்கான ஒத்திகைகள் நேற்று நடந்தன. ஒவ்வொரு ஆண்டும் இந்த அணிவகுப்பில் 2ம் உலகப் போரில் உயிர் நீத்த ரஷ்ய வீரர்களின் படங்கள் அலங்கரிக்கப்பட்டு அவர்களின் குடும்பத்தினர் கௌரவிக்கப்படுவது வழக்கம். இம்முறை உக்ரைன் போரில் உயிரிழந்த வீரர்களின் படங்களும் வைக்கப்பட்டு அவர்களின் குடும்பத்தினரையும் கௌரவிக்க அதிபர் புடின் உத்தரவிட்டுள்ளார். அதோடு, மே 9ம் திகதிக்குள் கிழக்கு உக்ரைனை ரஷ்யா மொத்தமாக தன் வசப்படுத்திக்கொள்ள திட்டமிட்டிருப்பதாக அந்நாட்டின் மூத்த ராணுவ அதிகாரி கடந்த சில நாள்களுக்கு முன் கூறியிருந் தார். இதனால் நாளை இதுதொடர்பான முக்கிய அறிவிப்பை அதிபர் புடின் வெளியிடுவாரா? என்ற எதிர் பார்ப்பு எழுந்துள்ளது. இதற்காக, உக்ரைனில் நேற்று ரஷ்யா தனது தாக்குதலை தீவிரப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# நீர்மூழ்கி கப்பலில் இருந்து ஏவுகணை ஏவி சோதனை

## வட கொரியா தொடர்ந்து அடாவடி



நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து தொலைதூர இலக்கை தாக்கும் ஏவுகணையை வடகொரியா ஏவி பரிசோதனை செய்துள்ளது. உலக நாடுகளின் எதிர்ப்பையும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் தீர்மானங்களையும் கண்டுகொள்ளாமல் வட கொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனை, கண்டம் விட்டுகண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து வருகிறது. அணு ஆயுதங்களை கைவிடுவது தொடர்பான பேச்சுக்குதிரும்பவேண்டுமென அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் வடகொரியாவை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஆனால் அதற்கு செவிசாய்க்காமல் தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில், வடகொரியா நேற்று கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பரிசோதனையை நடத்தியது. வட கொரியாவின் கிழக்கு கடற்கரையில், ஜப்பான் கடற்கரையை ஒட்டியுள்ள கடல் பகுதியில் ஏவியது என்று தென்கொரியா தெரிவித்துள்ளது. இதனை ஜப்பானின் கடலோர காவல்படையும் உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவுகணை ஏவப்பட்டதாக தகவல்கள் வந்துள்ளன.

தென் கொரியாவின் ராணுவ தளபதி கூறுகையில், "கிழக்கு கடற்கரை நகரான சின்போவில் ஏவுகணை பரிசோதனை நடந்தது. வட கொரியாவின், சின்போவில் நீர்மூழ்கிக் கப்பல் கட்டும் தளம் உள்ளது" என்றார். இது வட கொரியா இந்த ஆண்டில் நடத்தியிருக்கும் 15வது ஏவுகணை சோதனை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் தலிபான்கள் அதிரடி

## பொது இடங்களில் புர்கா கட்டாயம் தலைமுதல்கால்வரைமூடவேண்டும்



பொது இடங்களில் புர்கா உடை அணிந்து வர வேண்டும் என்று ஆப்கான் பெண்களுக்கு தலிபான்கள் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் இருந்த அமெரிக்க கூட்டு படைகள் வெளியேறியமையை யடுத்து, தலிபான் அமைப்பு ஆட்சியை கைப்பற்றியது. கடந்த 1996 முதல் 2001 வரை தலிபான்கள் ஆட்சியில் பல்வேறு பெண் உரிமைகள் மறுக்கப்பட்டன.

ஆனால் இம்முறை பெண்களுக்கு முழு சுதந்திரம் வழங்கப்படும் என ஆரம்பத்தில் தலிபான்கள் கூறினார். ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு பெண்களுக்கு எதிராக தங்களின் பழைய கட்டுப்பாடுகளை ஒவ்வொன்றாக விதித்து வருகின்றனர். சில நாள்களுக்கு முன், 6ம் வகுப்பிற்கு மேல் பெண் குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்ல தடை விதித்தனர். இந்த சம்பவத்திற்கு உலகின் பல்வேறு நாடுகள் எதிர்ப்பை தெரிவித்தன. ஆப்கான் தலைநகர் காபூல் மற்றும் பிற மாகாணங்களில் பெண்களுக்கு சாரதி உரிமம் வழங்க தலிபான்கள் தடை விதித்துள்ளனர் என சமீபத்தில் கூறப்பட்டது.

இந்நிலையில், ஆப்கானில் பெண்கள் பொது இடங்களில் தலையையும் உடம்பையும் முழுமையாக மறைக்கும் புர்கா உடை அணிய வேண்டும். பெண்கள் தங்களுடைய கண்களை தவிர்த்து முகத்தையும் மறைத்து கொள்ளவேண்டும். தேவை ஏற்பட்டால்தான் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும் என்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளனர். இதுகுறித்து தலிபான் தலைவர் ஹிபத்துல்லா அகுன்ஸாடா நிருபர்களுக்கு நேற்று பேட்டியளிக்கையில், "எங்கள் சகோதரிகளின் பாதுகாப்பு எங்களுக்கு முக்கியம். எனவே பொது இடங்களில் கட்டாயம் அவர்கள் ஹிஜாப் அணிய வேண்டும். ஹிஜாப் என்பது தலை முதல் காலை வரை மறைக்கக் கூடிய புர்காவாக இருப்பதே சிறந்தது. இந்த ஆணையை மீறி பெண்கள் யாராவது பொது இடத்தில் தங்கள் முகத்தை மறைக்காமல் சென்றது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களுடைய தந்தை அல்லது நெருங்கிய உறவினருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும்" என்றார்.

# உலகளவில் வைரஸ் பாதிப்பு 51,69 கோடியாக உயர்வடைந்தது

உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 51.69 கோடியாக அதிகரித்துள்ளது. சீனாவின் வுகான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 226 நாடுகள், பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் உருமாற்றமடைந்து பாதிப்பு அதிகரித்து வருகிறது. இந் நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 51 கோடியே 69 லட்சத்து 78 ஆயிரத்து 650 ஆக அதிகரித்துள்ளது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 3 கோடியே 90 லட் சத்து 69 ஆயிரத்து 901 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 47 கோடியே 16 லட்சத்து 32 ஆயிரத்து 954 பேர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் இதுவரை 62 லட்சத்து 75 ஆயிரத்து 795 பேர் உயிரிழந்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பங்குச்சந்தை குறித்து மாநில மொழிகளில் அறிந்து கொள்ள ஏகலைவா திட்டம் மத்திய நிதியமைச்சரால் ஆரம்பம்






நஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (என்.எஸ்.டி.எல்.) நிறுவன வெள்ளி விழா கொண்டாட்டம் மும்பையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பங்குச் சந்தை குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், பங்குச் சந்தைக்கான ஏகலைவா எனும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

ஏகலைவா திட்டம் மூலம் ஹிந்தி மற்றும் மாநில மொழிகளில் பங்குச் சந்தை குறித்து கற்றுக் கொள்ள முடியும் என்றும்,

இதனால் மாணவர்கள் பயனடைவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பங்குச்சந்தையில் இந்திய சில்லறை முதலீட்டாளர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் முக்கிய பங்கு வகித்து உள்ளனர் என்றும், அந்நிய முதலீட்டாளர்கள் போலில்லாமல் தங்களால் என்ன செய்யமுடியும் என்பதை இவ்வுலகிற்கு அவர்கள் காண்பித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்

சில்லறை முதலீட்டாளர்கள் சார்பில் 2019-20 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 4 லட்சம் புதிய கணக்குகள் தொடங்கப்பட்டன எனவும், 2020-21 இல் அது மாதத்திற்கு 12 லட்சமாக, மூன்று மடங்கு அதிகரித்தது என்றும், நடப்பாண்டில் சுமார் 26 லட்சமாக அது அதிகரித்துள்ளது என்றும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்

## தேசிய கல்விக் கொள்கையை அமுல்படுத்துவது குறித்து அமைச்சர்கள், உயர் அதிகாரிகளுடன் மோடி ஆலோசனை



தேசியக் கல்விக் கொள்கையை செயற்படுத்தப்படுவது குறித்து இந்தியப் பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்டக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது.

தேசிய கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மத்திய அமைச்சர்கள் மற்றும் கல்வி, தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு துறை உயர் அதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார். தேசிய கல்விக் கொள்கை அணுகுதல், சமத்துவம், தரம் ஆகிய குறிக்கோள்களுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று இந்தியப் பிரதமர் அப்போது குறிப்பிட்டார்.

பள்ளிக் குழந்தைகள் அதிகப்படியான தொழில்நுட்ப வெளிப்பாட்டைத் தவிர்க்க இணைய வழி மற்றும் பாரம்பரிய முறை ஆகிய இரண்டு முறைகளில் கற்றல் வடிவம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய வழிகாட்டுதல் குழுவின் வழிகாட்டுதலின் அடிப்படையில், தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான பணிகளின் முன்னேற்றம் குறித்து இந்தியப் பிரதமரிடம் அதிகாரிகள் எடுத்துரைத்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.





## டெல்லி துப்பாக்கிச் சூட்டில் இருவர் படுகாயம் மர்ம நபர்களுக்கு பொலிஸ் வலைவீச்சு

இந்தியத் தலைநகர் டெல்லியின் மேற்கு பகுதியில் உள்ள சுபாஷ் நகர் சாலை பகுதியில் நேற்றிரவு திடீரென மர்ம நபர்கள் சிலர் ஒரு வாகனத்தை குறி வைத்து 10 தடவைகளுக்கு மேல் துப்பாக்கிச் சூடு நடத்தினர். பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்திய நபர்கள் தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவர் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். அந்தப் பகுதி முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வாகனப் போக்குவரத்து மிகுந்த சாலையில் நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் டெல்லி சுபாஷ் நகர் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.



## தமிழக ஆளுநர் ரவி அத்துமீறிப் பேசுகிறாராம்

### வைகோ தெரிவிப்பு

ஒரு மாநிலத்தின் ஆளுநர் என்பவர், எந்தத் தத்துவத்தின் சாயலும் தம் மீது படுவதற்கு இடம் தரக்கூடாது. ஆனால் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசு அமைப்புச் சட்டத்தின்படி கடமை ஆற்றாமல், அத்துமீறி செயல்பட்டு வருகின்றார். ஒன்றிய பா.ஜ.க. அரசின் முகவராக ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்களின் குரலை எதிரொலிக்கின்றார், என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

அது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் சமயம் சார்ந்த நிகழ்வுகளில் பங்கேற்று, இந்தியாவின் ஆன்மிகத்தலைநகரம் தமிழ்நாடு என்ற கருத்தை, பலமுறை பேசி இருக்கின்றார். இந்தியத் தொழில்துறையின் தலைநகரம்தான் தமிழ்நாடே தவிர, மதவெறிக்கு இங்கே இடம் இல்லை. வட இந்திய மாநிலங்களைப் போன்ற மதவெறிச் சண்டைகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் இடம் தர மாட்டார்கள். இங்கே அனைத்துத் தரப்பு மக்களும் அமைதியாக வாழ்கின்றனர். ஆளுநர் ரவி, தொடர்ந்து மாநில அரசின் செயல்பாடுகளுக்குக் குறுக்கே நிற்பதையும், இந்துத்துவக் கோட்பாட்டிற்கு ஆதரவான கருத்துகளை முன்மொழிவதையும் அரசு அமைப்புச் சட்ட நெறிகளைக் காலில் போட்டு மிதிப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர் தமது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். தேவையற்ற பிரச்சினைகளுக்கு இடம் தரக் கூடாது. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்பது, மாநில அரசின் அதிகாரம் ஆகும். ஆளுநர் தலையிட முயற்சிப்பது அத்துமீறல் ஆகும், என்றும் வை.கோ தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்தியப் பகுதியில் நுழைய முயன்ற பாகிஸ்தானின் ஆளில்லா விமானம்

### துப்பாக்கிச்சூடு நடத்திய எல்லைப் பாதுகாப்புப் படை





ஜம்முவில் உள்ள சர்வதேச எல்லையில் இருந்து இந்தியப் பகுதியை நோக்கி நேற்றிரவு 7.25 அளவில் பாகிஸ்தானின் ஆளில்லா விமானம் (ட்ரோன்) ஒன்று பறந்து வருவதைக் கண்ட எல்லைப் பாதுகாப்புப் படையினர் அதன்மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அந்த ஆளில்லா விமானம் பாகிஸ்தான் பக்கம் திரும்பிச் சென்றதாகவும் எனினும் அந்த விமானத்தில் இருந்து எந்தப் பொருளாவது வீசப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டதாகவும் ஜம்மு எல்லைப்புற பாதுகாப்புப் படை அதிகாரி ஜெனரல் எஸ்.பி.சந்து தெரிவித்துள்ளார்.

ஆளில்லா விமானம் பறந்து வந்த முழுப் பகுதியும் சுற்றி வளைக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜம்மு காஷ்மீரின் சம்பா மாவட்டத்தின் சக்பகிரா பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினர், எல்லை தாண்டிய நிலத்தடி சுரங்கப்பாதையை கண்டு பிடித்து அழித்தனர்.

இது நடந்து மூன்று நாள்களுக்குப் பிறகு பாகிஸ்தானில் இருந்து ஆளில்லா விமானம் ஏவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் ஆர்ப்பாட்டம்




கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஒன்றிணைந்த சுகாதார சேவைகள் தொழிற்சங்கத்தினால் வைத்தியசாலைக்கு முன்னால் கடந்த வெள்ளிக்கிழமை – ஹர்த்தால் தினத்தன்று – முற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, சுகாதார சேவையில் காணப்படும் குறைபாடுகள் போன்றவற்றை உடனடியாக நீக்க வேண்டியும் பொதுமக்களுக்கான சுகாதார சேவைகள் தங்குதடையின்றி இடம்பெற உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுமே வைத்தியசாலையின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டோர் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை வெளிப்படுத்தி தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

# கிழக்குப் பல்கலை மாணவர் திருமலையில் ஆர்ப்பாட்டம்




கிழக்கு மாகாண பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர்கள் திருகோணமலையில் அரசுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாண பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டம் பேரணியாக திருகோணமலை அபயபுர சுற்றுவட்ட சந்தியிலிருந்து ஆரம்பமாகி ஆண்டாங்குளம், திருகோணமலை கண்டி பிரதான வீதியின் ஊடாக நான்காம் கட்டை சந்தி வரை நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் 300க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பொருளாதாரநெருக்கடிகளை ஆட்சேபித்தும், கொழும்பில் நாடாளுமன்ற வளாகத்திற்கு முன்பாக அமைதியான முறையில் எதிர்ப்பை முன்னெடுத்த மாணவர்களின் மீது கண்ணீர் புகைக் குண்டு வீசி நீர் தாரையடித்தும் கலைத்தமையை. ஆட்சேபித்தும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# ஒந்தாச்சிமட விபத்தில் அரச ஊழியர் உயிரிழப்பு

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடிபொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியின் ஒந்தாச்சிமடத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் அரச உத்தியோகஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என களுவாஞ்சிகுடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரான மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட எருவில் சமுர்த்தி வங்கியில் காசாளராக கடைமையாற்றும் களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான நாகராசா விஜேந்திரன் (வயது 58) எனும் அரச உத்தியோகத்தரே இவ் விபத்தில் உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு பக்கமி ருந்து கல்முனை பக்கம் நோக்கி பணித்த மோட்டார் சைக்கிள் மீது அதே திசையில் பின்னால் சென்ற சொகுசு ரக ஜீப் வண்டி ஒன்று மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளதாக அவ்விடத்தில் நின்ற மக்கள் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னனெடுத்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# பாலமுனையில் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்குக் கண்டனம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பாலமுனை சம்பவத்தில் ஊடகவியலாளரின் பணிக்குக் குந்தகம் விளைவித்து, அவர் தாக்கப்பட்டமை மற்றும் ஊடக உபகரணங்களைப் பறிமுதல் செய்தமை தொடர்பில் கடுமையான கண்டனங்களையும் கவலையையும் தெரிவிப்பதாக சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பொதுச்செயலாளர் எம்.ஜே. பிஸ்ரின் முஹம்மத் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அட்டாளைச்சேனை பாலமுனை பிரதேசத்தில் கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற சம்பவமொன்றில் ஊடகவியலாளர் ஹீர் கான் பாரூக் தாக்கப்பட்டமையுடன், கலவரத்தில் ஈடுபட்டவர்கள் அவரது கமரா மற்றும் ஒரு தொகை பணத்தையும் பறிமுதல் செய்துள்ளனர் எனப் பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்கப்பட்ட ஊடகவியலாளர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் வைத்தியசாலையில்இருந்துவெளியேறிச் சென்றுள்ளார். ஊடகவியலாளர்களின் பணிக்கு குந்தகம் விளைவித்து தாக்கப்பட்டமை மற்றும் ஊடக உபகரணங்களை பறிமுதல் செய்தமை தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம் கடுமையான கண்டனங்களையும் கவலையையும் தெரிவிக்கின்றது. இனிவரும் காலங்களில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறாமல் இருக்க வழியமைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வதோடு, ஊடகவியலாளர்கள் தங்கள் பணிகளைச் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் மேற்கொள்ள உரிய தரப்பினர் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கின்றோம். – என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிழக்கில் தாதிய உத்தியோகத்தர்கள் 148 பேருக்கு இணைப்புக் கடிதங்கள்

(பைல் இஸ்மாயில்)

மத்திய சுகாதார அமைச்சினால் புதிதாக நியமனம் வழங்கி வைக்கப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களில் 148 பேர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர் என மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுகாதார அமைச்சினால் இணைப்பு செய்யப்பட்ட 148 தாதிய உத்தியோகத்தர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ரீதியாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

45 பேர் மட்டக்களப்புக்கும், 43 பேர் திருகோணமலைக்கும், 37 பேர் கல்முனைக்கும், 23 பேர் அம்பாறைக்கும் இணைப்புச் செய்யப்பட்டு அவர்களுக்கான இணைப்புக் கடிதங்களை நேற்று முன்தினம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளன – எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திவாகாரசர்மா, நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவானி, சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி எஸ். விஜயகுமார் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தார்.



# நாட்டின் தற்போதைய நிலைமைக்கு ரணிலும் பொறுப்புக் கூற வேண்டும்!

## நாடாளுமன்றில் சாணக்கியன் தெரிவிப்பு



கொழும்பு, மே08

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு ரணிலும் பொறுப்புக் கூற வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இரா.சாணக்கியன் ஆற்றிய உரைக்கு அடுத்த நாள் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார். அதற்கு வெள்ளியன்று சாணக்கியன் பதிலடி தந்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'கொலைகாரர்களின் ஆதரவுடன் 2013ஆம் ஆண்டுதொகுதி அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் சபையில் பல தடவைகள் பகிரங்க மன்னிப்புகோரியுள்ளேன்.

பிள்ளையான் 600 பொலிஸாரைக் கொலை செய்தார் எனக் குறிப்பிடப்படும் விடயத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனது பெயரையும் குறிப்பிட்டுள்ளமை பொருத்தமற்றது. ஏனெனில் நான் அது நடந்த 1990 ஆம் ஆண்டே பிறந்தேன்.

அத்துடன் ராஜபக்ஷக்களுக்கு ஒருபோதும் நான் சரணம் கச்சாமி குறிப்பிடவில்லை.

இந்தநிலையில் 2015 ஆம்ஆண்டு அர்ஜுன மகேந்திரனை மத்திய வங்கியின் ஆளுநராக்கி அதன் மூலம் பாரிய மோசடிக்கு ரணில் விக்கிரமசிங்க வழி வகுத்தார்.

அத்துடன் அவரின் உறவினரான அலோசியஸின் மெண்டிஸ் நிறுவனத்துக்கு 350 கோடி ரூபா வங்கி ஒன்றிடம் கடன் உள்ளது. எனவே அவரை மீண்டும் கொண்டு வருவதற்கு ரணில் விக்கிரமசிங்க உதவ வேண்டும். நாட்டின் தற்போதைய நிலைமைக்கு இவரும் பொறுப்புக் கூற வேண்டும்.

நான் அவரது இல்லத்தை முற்றுகையிட முயற்சிக்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது. மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகிய நான் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தை முற்றுகையிடுவது சாத்தியமற்றது.

'கோ ஹோம் ரணில்' எனப் போராட வேண்டிய தேவை கிடையாது. ஏனெனில் மக்கள் ஏற்கெனவே இவரை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். தேசிய பட்டியல் ஊடாகவே நாடாளு மன்ற உறுப்பினராக இவர் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

நாடாளுமன்ற கோட்பாடுகள் எனக்கு தெரியாது என மொஹமட் முஸாம குறிப்பிட்டுள்ளார். நான் அவரைப் போல் தேசியப் பட்டியல் ஊடாகத் தெரிவு செய்யப்படவில்லை. மக்களின் தெரிவின் ஊடாக தெரிவுசெய்யப்பட்டுள்ளேன் என்பதை குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.' எனக் குறிப்பிட்டுள்ளார்.




## மருந்துப் பொருள் தட்டுப்பாட்டால் யாழிலும் சுகாதார சேவை பாதிப்பு

### அவதானமாக இருக்க மக்களுக்கு அறிவுறுத்து

யாழ் போதனா வைத்தியசாலையில் மருந்துகளின் தட்டுப்பாடு மேலும் அதிகரித்துள்ள நிலையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பொதுமக்களிடம் அவசர கோரிக்கையினை முன்வைத்துள்ளது. இதன்படி நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

சேலைன் முதற்கொண்டு அத்தியாவசிய மருந்து பொருள்களின் கையிருப்பு மிகவும் குறைந்து சென்றுள்ளதுடன் தேசிய மருந்து தட்டுப்பாடு அபாய நிலை காரணமாக சத்திர சிகிச்சை கூட செயற்பாடுகளை பாரிய அளவில் மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உயிர் காக்கும் அவசர சிகிச்சைகளும், அவசர நரம்பியல் சத்திர சிகிச்சைகளும், கர்ப்பிணித் தாய்மார்களிற்கான அவசர சத்திர சிகிச்சைகளும் மட்டுமே நடை பெறும். மேலும் சில சத்திர சிகிச்சை கூடங்கள் தற்காலிகமாக மூடப்படுகின்றன.

இந்த நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு மக்கள் அனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அநாவசிய பயணங்களை குறைப்பதாலும் மட்டுப்படுத்திய வேக கட்டுப்பாட்டுடன், சிரத்தையான வாகனச் செலுத்துகைகளை மேற்கொண்டு வீதி விபத்துக்களைத்தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சமூக மற்றும் குடும்ப வன்முறைகளில் ஈடுபடாதிருக்கவும், மதுபானம், போதைப்பொருள் பாவனைகளால் தாமாக நோயேற்படுத்தும் தன்மையைத் தவிர்த்து சுகாதார சேவைக்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'புலிகளின்டொலர்கள்எங்கே?' படை முகாம் முன் போராட்டம்





வவுனியாவில் இராணுவ முகாம் அருகே சிங்கள மக்கள் போராட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் முன்னெடுத்திருந்தனர். மூன்று முறிப்பு பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களின் ஏற்பாட்டில்ஏ9வீதியின்ஒருவழிப்பாதையினை மறித்து இந்தப் போராட்டமானது இடம் பெற்றிருந்தது.

இதன் போது விடுதலைப் புலிகளின் டொலர்எங்கே?, எங்கள் பணத்தை எங்களிற்கு தாருங்கள்,நாங்கள் கேட்பது சாப்பிடுவதற்கு ஆனால் கிடைப்பது உங்களுக்கு, கோ ஹோம் கோட்டாபோன்ற பதாதைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள வன்னி கூட்டுப்படை தலைமையகத்தின் அருகிலேயே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு இருந்தது.

## தனிமையிலிருந்த மூதாட்டி மீது தெல்லிப்பழையில் வாள்வெட்டு!

யாழ். தெல்லிப்பழை பகுதியில் தனிமையில் இருந்த மூதாட்டி ஒருவர் வாள்வெட்டுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தப் பயங்கர சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தெல்லிப்பழை வித்தகபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் -

தனிமையில் வசித்து வந்த மூதாட்டியிடம் கொள்ளை இடுவதற்காக மூவர் கொண்ட குழு வீட்டுக்குள் நுழைந்துள்ளது. இதன்போது கொள்ளையர்களைக் கண்ட மூதாட்டி சத்தமிட்ட போது, கொள்ளையர்கள் மூதாட்டியை வாளால் வெட்டிவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர். இந்நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.05.2022இல் வெளியிடப்பெற்றது.